# இடர்கால வாராந்தப்பாடசாலை செயற்பாட்டுப்பத்திரம்

## கல்விப் பொதுத்தராதர உயர்தரம் - தமிழ் (72)

தரம் - 12 ஆசிரியை : திருமதி.R.ரேணுகா தேவி

வாரம் - 09 இ/இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலயம்

தவணை - 02

---

தேர்ச்சி : 7.0 மொழியமைப்பை (மரபு, தற்காலம்) அறிந்து மொழியை செம்மையாக கையாள்வார்.

தேர்ச்சி மட்டம் : 7.3 சொற்களின் அமைப்பையும் வகையையும் அறிந்து மொழியை செம்மையாக கையாள்வார்.

விடயம் : பெயர்ச்சொல்

**சரியான விடையை தெரிவு செய்க.**

1) வேங்கை என்பது
   1. பொதுமொழி
   2. ஒருமொழி
   3. தொடர்மொழி
   4. இருமொழி
   5. வன்மொழி

2) “அருமந்த” என்பது
   1. இலக்கணமுடையது
   2. இலக்கணப்போலி
   3. மரூஉ
   4. குழூஉக்குறி
   5. இடக்கரடக்கல்

3) பின்வருவனவற்றுள் இலக்கணப்போலியாக அமைவது
   1. நகர்புறம்
   2. இல்முன்
   3. நாநுனி
   4. அண்ணக்கடை
   5. கோயில்

4) ‘‘இது நமது வீடு’’ இங்கு நமது என்பது
   1. எழுவாய்
   2. தன்மை
   3. தன்மை பன்மை
   4. உளப்பாட்டு தன்மை பன்மை
   5. உளப்படுத்தாத் தன்மை பன்மை

5) பின்வருவனவற்றுள் ஆண், பெண் பால் வேறுபாட்டை கொண்ட சொல்வகை
   1. தன்மைப்பெயர்
   2. படர்க்கைப்பெயர்
   3. முன்னிலைப்பெயர்
   4. அ.ஃறிணைப்பெயர்
   5. உயர்திணை தன்மைப்பெயர்

6) பின்வருவனவற்றுள் பெயராகவும் வினையாகவும் வரும் சொல்
   1. பூசு
   2. தூசு
   3. விடு
   4. பொரி
   5. மாறு

7) பின்வருவனவற்றுள் உயர்திணை இருபாற் பொதுப்பெயராக அமையாதது
   1. பேதை
   2. நோயாளி
   3. பிரதிவாதி
   4. அகதி
   5. குரிசில்

8) ‘‘கூவின பூங்குயில்;கூவின கோழிகள்’’ இங்கு பூங்குயில் என்பது
   1. அ.ஃறிணை ஒன்றன்பால்
   2. அ.ஃறிணை பலவின்பால்
   3. பால்பகா அ.ஃறிணை
   4. அ.ஃறிணை ஆண்பால்
   5. அ.ஃறிணை பெண்பால்

9) பின்வருவனவற்றுள் இருதிணை பொதுப்பெயராய் அமைவது
1. பெரியோன்
2. சிறியோன்
3. தாய்
4. பெண்
5. குமரன்

10) காரண சிறப்பு பெயரை கொண்ட சொற்றொகுதி
1. மரம், மண்
2. மரங்கொத்தி, பாக்குவெட்டி
3. கரி, காரி
4. விலங்கு, மாடு
5. பறவை, பருந்து

11) வேற்றுமை உருபை ஏற்கும் போது திரிபடையாத மாற்றுப்பெயர்
1. அரசன்
2. நான்
3. நீங்கள்
4. அது
5. நீ

12) அன்னாசி என்பது எம்மொழிச்சொல்?
1. ஒல்லாந்து
2. போர்த்துக்கேயம்
3. ஆங்கிலம்
4. உருது
5. கன்னடம்

13) பின்வருவனவற்றுள் கிரேக்க மொழிச்சொல்
1. ஓரை
2. இலாகா
3. துப்பாக்கி
4. அட்டிகை
5. தளபாடம்

14) சுட்டெழுத்துக்களை அடிப்படையாகக் கொண்ட மாற்றுப்பெயர் அல்லாதது
1. அவன்
2. இவன்
3. உவள்
4. அது
5. எது